**ஈழத்தமிழர்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வைக் காண்பதற்கான உள்ளக முறைகளை நிராகரித்தலும் வெளியகப் பொறிமுறைகளை உருவாக்குவதற்குமான மூலதத்துவங்கள்.**

(Advance Unedited Draft)

**<u>தோற்றுவாய்</u>**

1. மக்கள் குழாமொன்றிற்குள்ள சுயநிர்ணய உரிமையே பன்னாட்டுச் சட்டத்திற்கான முடிவான அடிப்படையாக அமைகின்றதென்பதனை உறுதிப்படுத்திய ஐக்கிய நாடுகள் சபைப் பட்டயம், சுயநிர்ணய உரிமையினை பன்னாட்டு மனித உரிமைகளின் வரைநெறியாகக்கொண்டதையும், பன்னாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்புகளால் அதனை மேலும் வலுப்படுத்தப்படுத்தியதையும் ஞாபகப்படுத்திக் கொண்டு,
2. மெய்யான அரசு மட்டுமே பன்னாட்டுச் சட்டப்பொருளாகக் கொள்ளப்படுவதில்லை. மாறாக கூட்டு அடையாளம், வரலாற்றுத் தொடர்ச்சி, நிலத்தொடர்பு உட்படத் தமது அரசியலபிலாசைகளைத் தம்மிடையே பகிர்வதன் ஊடாகத் தம்மையொரு சுயநிர்ணய உரிமைக்குரித்துடைய இனக்குழாமாக (Peoples) அடையாளப்படுத்தியிருத்தலே போதுமானது என்பதனை உறுதிப்படுத்திக்கொண்டு,
3. பன்னாட்டு அரசியற் சிந்தனைப் போக்கில் பல முழுமையடைந்து நிலைபெற்ற மானுட மரபுகள் தேசம் (nationhood) என்பதனை வெளிப்படுத்தி வந்துள்ளதனை ஏற்றுக்கொண்டு, அவற்றில் முக்கியமானவையாக:

    - 1914 முதல் 1916 வரை விளாடிமிர் லெனின் முன்வைத்த ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கான (oppressed nations) கருத்தாக்கமானது தேசிய ஒடுக்குமுறைக்கு தீர்வாக, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தன்னிச்சையான சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை அங்கீகரிக்கிறது;

- 1918 இல் வுட்ரோ வில்சன் முன்வைத்த சுயநிர்ணயக் கொள்கையானது வெளிப்புறச் சக்திகளின் தலையீடின்றி மக்கள்குழாமொன்று தங்களது அரசியல் நிலையைத் தாமே தீர்மானிக்கும் உரிமையினையும், தாங்கள் விரும்பும் வகையில் தங்களது விருத்தியை முன்நகர்த்த அவர்களுக்கிருக்கும் உரிமைகளையும் உறுதிப்படுத்தப்படுகிறது;
- நவீன தேசக் கருத்தாக்கங்களிலொன்றான, 1983 இல் பெனடிக்ட் அண்டர்சன் முன்வைத்த “நினைவிலுறையும் அரசியற் சமூகங்கள்” (imagined political communities) என்ற கருத்தாக்கத்தில் தேசம் என்பது பகிரப்பட்ட நினைவுகள், கூட்டுத்தியாகங்கள், அரசியல் விழிப்புணர்வு, என்பவற்றுடன் இன்றுள்ள தமது பொருளாதார நிலைக்காகவும் தமது பொதுஎதிர்காலத்தில் உருவாகும் நிலைக்காகவும் அவர்களது தொடர்சியான அர்ப்பணிப்பானது அவர்களது நிலப்பரப்பின் எல்லைகளைத் தாண்டியும் அவர்களிடையே உருவாகியிருக்கும்

என்பவற்றை அங்கீகரித்துக்கொண்டு,

4. அனைத்துத் தேசிய இனக்குழாம்களையும், அவர்களுக்குத் தேசமிருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, இனப்படுகொலையில் இருந்து தடுப்பதற்கும் பாதுகாப்பதற்குமென பன்னாட்டுக் குற்றவியல் சட்டம் இனப்படுகொலை வரைபினை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருவதனை மேலும் அங்கீகரித்து;
5. ஈழத்தமிழர்கள் தனித்துவமானவர்கள் எனவும், ஒரு அரசற்ற தேசத்தவர்களாக, தொடர்ச்சியான வரலாற்று இருப்பு, பொதுவான மொழி, பண்பாடு, அரசியல் அடையாளம், மற்றும் தமது தாயக நிலப்பரப்புடன் ஆழமான பிணைப்பைக் கொண்டவர்களாகவும் உள்ளனர் என்பதனையும் அங்கீகரித்து;
6. தீவில் ஈழத்தமிழர்களின் தொடர்ச்சியான வரலாற்று இருப்பு, நிலப்பரப்புடன் அவர்களுக்குள்ள உள்ள பிணைப்பு, தலைமுறை தலைமுறையாகக் தம்மிடையே அவர்கள் கடத்திய பண்பாடு மற்றும் மொழிசார் பாரம்பரியம் ஆகியன அவர்களை பழங்குடியின மக்களின் அடையாளம் மற்றும் நில உரிமைப் பறிப்பிலிருந்தும், இராணுவமயமாதலிலிருந்தும் தடுப்பதற்கான பன்னாட்டுப் பாதுகாப்பு நெறிமுறைகளினை ஈழத்தமிழர்களான தம்மீதும் பிரயோகிக்கத்தக்கவையாக தகுதிப்படுத்தியுள்ளன என்பதைக் குறிப்பிட்டு;
7. ஈழத்தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனையானது அவர்களின் மக்கள்குழாத்தன்மை (peoplehood) மற்றும் அம்மக்கள்குழாத்தின் சுயநிர்ணய உரிமையுடன் தொடர்புடையதென்பதனைக் கருத்திலெடுக்காமல் ஒற்றையாட்சி (unitary) அரசியலமைப்புக்குள் அடங்கிய ஒரு சாதாரண சிறுபான்மைக் கோரிக்கையாக மட்டுமே சுருக்கிப் பார்க்கமுயலும் வாதங்களையும் நிராகரித்து**;**
8. தனித்துவமான மத, பண்பாட்டு, சமூக அடையாளங்களை பேணிவரும் முஸ்லிம்கள் உட்பட தீவில் வாழும் தமிழ் பேசும் ஏனைய மக்களும்**,** அதே புவியியல் நிலப்பரப்புடனும் மொழியுடனும் வரலாற்று தொடர்புகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள் என்பதையும், அவர்கள் தங்களது தனிநபர் மற்றும் கூட்டுரிமைகள் அனைத்தையும் முழுமையாக அனுபவிக்கும் உரிமை பெற்றவர்கள் என்பதையும், தங்களது தனித்த அடையாளத்தை ஒடுக்கும் அல்லது கைவிட வேண்டிய கட்டாயமின்றி**,** உள்ளக சுயநிர்ணய உரிமையை (internal self-determination) அவற்றைப் பயன்படுத்தும் உரிமையும் அடங்கும் என்பதையும் அங்கீகரித்து;
**9.** 1619 ஆம் ஆண்டில் தொடங்கிய காலனித்துவ ஆக்கிரமிப்பின் மூலம் ஈழத்தமிழ்த் தாயகத்தின் இறையாண்மை (sovereignty) இழக்கப்பட்டதையும், காலனித்துவ நீக்கத்தின் (decolonisation) பின்னரும்கூட அந்த இறையாண்மை அம்மக்களிடம் மீளக்கையளிக்கப்படவில்லை என்பதையும் நினைவுகூர்ந்து;

10. ஐரோப்பிய காலனித்துவம் தொடங்குவதற்கு முன்னரே, ஈழத்தமிழ் தாயகத்தில் நிலபுலக்கட்டுறுத்துரிமையும் அரசியல் தொடர்ச்சியும் நிலவியிருந்ததையும், போர்த்துக்கேய ஆக்கிரமிப்பிற்கு முன்புவரை தீவின் தொடர்ச்சியான வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தனித்துவமான ஆட்சி அமைப்புகள், நீதித்துறை நிர்வாகம், மற்றும் நில உரிமை (land tenure) முறைகள் செயல்பட்டு வந்ததையும் நினைவுகூர்ந்து;

11. ஆரம்பகால காலனித்துவ பதிவுகள், நீதித்துறைப் பிரிவுகள், மற்றும் வரைபடச் சித்தரிப்புகளில் பிரதிபலிப்பது போல, டச்சு மற்றும் பிரித்தானிய காலனித்துவ நிர்வாகங்களும், ஈழத்தமிழ் தாயகத்தைத் தனித்துவமான நிலப்பரப்பாகவும் நிர்வாக அலகாகவும் அங்கீகரித்து நிர்வகித்தன என்பதையும் குறிப்பிட்டு; அவற்றில்,

   - ஜே. டு பெர்ரோன் (1789) மற்றும் ஜான் அரோஸ்மித் (1857) ஆகியோரின் வரைபடங்கள் உட்பட, வடமேற்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள மோதரகம் ஆறு (Modaragam Aru) முதல் தென்கிழக்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள கும்புக்கன் ஓயா (Kumbukkan Oya) வரை பரவி இருக்கும் தொடர்ச்சியான கடலோர தமிழ் பேசும் நிலப்பரப்பைத் தெளிவாக அடையாளம் காட்டியுள்ளன

   என்பதை மேலும் நினைவிற்கொண்டு;

12. 1833 ஆம் ஆண்டின் கோல்ப்ரூக்–கெமரூன் (Colebrooke–Cameron) சீர்திருத்தங்கள், இவ் வரலாற்றுத் தனித்துவத்தையும் அரசியல் மற்றும் நிலப்பரப்பு ஒழுங்குகளையும் கருத்திலெடுக்காது முழுத்தீவையும் ஒன்றிணைந்த, மையப்படுத்தப்பட்ட நிர்வாக அலகாக ஈழத்தமிழர்களின் அனுமதியின்றி மாற்றியெழுதி அதனை அவர்களின் மீது திணித்தபோது முதன்முறையாக அம்மக்களின் வரலாற்று இறையாண்மை சிதைக்கப்பட்டது என்பதை,மிகுந்த கவலையுடன் நினைவுகூர்ந்து;

**13.** இந்த வகையில் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட ஒருங்கிணைந்த (unitary) கட்டமைப்பானது அரசியல் மற்றும் நிலப்பரப்பினால் ஓரலகாகவிருந்த தமிழ் தாயகத்தை முதன்முறையாக அதிகாரப்பூர்வமாகக் குலைத்ததையும், அதன் தொடர்ச்சியாக, புறக்கணிப்பு (marginalisation), உரிமை பறிப்பு (dispossession), மற்றும் பௌத்த சிங்கள தேரவாத பெரும்பான்மையாதிக்க (Sinhala Theravada Buddhist majoritarian domination) அரசியலுக்கான கட்டமைப்புச் சார்ந்த அடித்தளங்களை உருவாக்கியதையும் கவனத்தில் கொண்டு;

14. தமிழ் தாயகத்தின் நிலப்பரப்புத் தொடர்ச்சித்தன்மை, அந் நிலப்பகுதி மற்றும் அதனை ஒட்டிய கடற்பரப்புகள் உட்பட, பண்பாட்டு வரலாற்று நடைமுறைகள், மக்கள்தொகையும் தொடர்ச்சியும், காலனித்துவ நிர்வாகப் பதிவுகள், மற்றும் தமிழ் மக்களின் வாழ்வியல், அரசியல் விழிப்புணர்வு ஆகியவற்றின் மூலம் தொடர்ந்து உறுதிப்படுத்தப்பட்டு வந்துள்ளது என்பதையும், இவ்விருப்பைப் பின்னர் துண்டாக்க, தளர்த்த, அல்லது மறுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவையெவற்றையும் பொருட்படுத்தாமல், இவ்வுண்மை நிலைத்திருக்கிறது என்பதையும் அங்கீகரித்து;

15. இத்தீவின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளைக் கடந்து விரிந்திருந்த வரலாற்றுத் தமிழ் தாயக நிலப்பரப்பில் நிலவிய நிர்வாக நடைமுறைகள், குடியமர்ந்த வடிவங்கள், மற்றும் பண்பாட்டுத் தொடர்ச்சித் தன்மைகளின்படி பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் சுயநிர்ணய உரிமைக்குரிய அத்தியாவசியக் கூறுகளை ஈழத்தமிழினம் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு;

16. 1947 ஆம் ஆண்டின் சோல்பரி அரசியலமைப்பு உட்பட 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளின் குடியரசு அரசியலமைப்புகள் யாவும் ஈழத்தமிழர்களின் சுதந்திரமானதும் அறிவுபூர்வமானதுமான சம்மதமின்றி இயற்றப்பட்டதுடன், அவர்களின் கூட்டு அரசியல் விருப்பத்தைக் (collective political will)

கருத்திற்கொள்ளாது ஒற்றையாட்சி (unitary) மற்றும் பெரும்பான்மையாதிக்க (majoritarian) அரசியலமைப்பு ஒழுங்கை நிறுவன ரீதியாக (institutionalised) உறுதிப்படுத்தின என்பதையும் நினைவிற்கொண்டு;

17. ஐக்கியநாடுகள் சபையில் தனது அங்கத்துவத்தைப் பெறுவதற்காக இலங்கை விண்ணப்பித்தபோது அதனை வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தித் தடுத்து விளக்கமளித்த சோவியத் ஒன்றிய மற்றும் உக்ரேனியப் பிரதிநிதிகள் சோல்பரி அரசியலமைப்பின் கீழான அரசியலமைப்பின் கூறுகள் முழுச் சுதந்திரத்தையும் இலங்கைக்கு அளிக்கவில்லை என்று வாதிட்டதையும், பின்னர் காலனித்துவமீட்பு நெறிமுறையாக நிகழ்ந்துள்ளதா என்பதையோ அதன் உள்நாட்டு சட்டபூர்வத்தன்மை நியாயமானதா என்பதையோ கருத்திற்கொள்ளாமல் பூகோள அரசியலில் பனிப்போரின்போது நிகழ்ந்த பரந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக அமெரிக்கத் தலைமையிலான மேற்குலகிற்கும் இரஸ்யத் தலைமையிலான நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட இணக்கப்பாட்டிற்கமைவாக 1955இல் அங்கத்துவம் வழங்கப்பட்டதையும் அவதானத்திற்கொண்டு;

18. இந்த அரசியலமைப்பு வடிவங்கள் யாவும் ஈழத்தமிழ் மக்களை ஒரு தனித்துவமான மக்கள் (distinct people) என அங்கீகரிப்பதை மறுத்ததுடன், முன்னிருந்த நிலப்பரப்பு மற்றும் அரசியல் ஒழுங்குகளை அவர்களிடமிருந்து கலைத்து அரசியலமைப்பு வழிமுறைகள் மூலம் அவர்கள் சுயநிர்ணயத்தை அடையும் சாத்தியத்தையும் மெல்ல மெல்ல அழித்தொழித்தன என்பதைக் குறிப்பிட்டு;

19. மேலும், இலங்கை-இந்திய ஒப்பந்தமும் (1987) அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு மாற்றங்களும் ஒற்றையாட்சி (unitary) அரசின் மேலாதிக்கத்தைத் தொடர்ந்து தக்கவைத்ததுடன், பிராந்திய சுயாட்சியை மத்திய அரசின் விருப்பத் தீர்மானத்திற்குள் உள்ளடக்கியதுடன் அங்கு பன்னாட்டு உத்தரவாதங்களோ அதற்கமைய நடைமுறைப்படுத்தும் திறனோ இவ்வரசியலமைப்பு மாற்றங்களுக்கு இல்லாமல் போனதால் ஏற்கனவே நிலவிய கட்டமைப்புசார் குறைபாடுகளை அவ் ஒப்பந்தமும் தீர்த்துவைப்பதில் தோல்வியடைந்தன என்பதை மேலும் குறிப்பிட்டு;

20. சீர்திருத்தத்தன்மை கொண்டவையென முன்வைக்கப்பட்ட, 1995 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு முன்மொழிவுகளும் மையப்படுத்தப்பட்ட இறையாண்மையையும் இறுதி அதிகாரத்தையும் பாதுகாத்து நிற்கும் ஒருங்கிணைந்த (unitary) அரசியலமைப்பு கோட்பாட்டிலேயே உறுதியாக அடித்தளமிட்டிருந்திருந்தன என்பதையும்; மேலும், அவை ஈழத்தமிழ் மக்களை சமத்துவமான சுயநிர்ணய உரிமையைக் கொண்ட இணை மக்களாக (co-equal self-determining People) அங்கீகரிக்க மறுத்ததையும்; அத்துடன், தமது விருப்பத்துடன் தமக்குச் சமநிலை உறுதிப்படுத்தப்பட்ட சுயாட்சிக்குப் பதிலாக, மைய அரசின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கிய, கீழ்ப்பட்ட நிர்வாக ஏற்பாடுகளாக ஈழத்தமிழ் அரசியற் கோரிக்கைகளைச் சுருக்கிக் கட்டுப்படுத்தியதையும் நினைவுகூர்ந்து;

21. 2019 ஆம் ஆண்டில் கலந்துரையாடப்பட்ட ஆவணமானது (Discussion Paper), பிரிக்க முடியாத தன்மை (doctrine of indivisibility) என்ற கோட்பாட்டை உறுதிப்படுத்தியதுடன், மக்களுக்கிடையேயான சமதரநிலையை (parity between peoples) ஏற்றுக்கொள்ள மறுத்ததையும், தேசிய இன அரசியல் அடையாளத்தை உள்ளடக்கிய மதச்சார்பற்ற வெளிப்பாடுகளையும் கூட நியாயமற்றதாக மாற்ற முயன்றதன் மூலம், சனநாயக சுய வெளிப்பாடு மற்றும் அரசியற் பங்கேற்பு ஆகியவற்றை கட்டுப்படுத்தியது என்பதையும் கவலையுடன் குறிப்பிட்டு;

22. இவ்வாறு தொடர்ந்த அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகள் யாவும் ஒட்டுமொத்தமாகவே உள்நாட்டில் முழுமையற்று அர்த்தமுள்ள சம்மதம் இன்மையால் மிகப் பலவீனமாகிப்போயுள்ளதுடன், தற்போதுள்ள அரசியலமைப்பு ஒழுங்குக்குள், ஈழத்தமிழ் மக்கள் தங்களது அரசியல்

நிலையைத் தீர்மானிக்கும் உரிமையானது முறையாகவும் திட்டமிட்ட வகையிலும் மறுதளிக்கப்பட்டுள்ளதனை வெளிப்படுத்துகின்றன என்பதை உறுதிப்படுத்தி;

23. காலனித்துவமீட்பு (decolonisation) செயல்முறையிலும் அல்லது அதன் பிந்தைய அரசியலமைப்பு உருவாக்கத்திலும், இந்தத் தீவில் வரலாற்று அடிப்படையில் உருவான மக்களுக்கிடையில் சமத்துவத்தையும் சுதந்திரமான சம்மதத்தையும் அடிப்படையாகக் கொண்ட முன்-அரசியலமைப்பு உடன்படிக்கைகள் எதுவும் ஏற்படுத்தப்படாததால், ஈழத்தமிழ் மக்கள் தம் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதில் அடிப்படை அரசியலமைப்புச் சட்ட ஒழுங்கு கட்டமைப்புச் சீர்கேடுடையதாக (structurally defective) அமைந்துவருகிறது என்பதனை மேலும் உறுதிப்படுத்திக்கொண்டு;

24. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் தலைமையின் கீழ் தமிழ் அரசியல் இயக்கமானது அரசியலமைப்பில் உள்ளடங்கிய கூட்டாட்சிக்கோரிக்கைகளை முன்வைத்துப் பல தசாப்தங்களாக முழுமையாக அகிம்சை மற்றும் சனநாயக வழிமுறைகள் மூலமாக முன்னெடுத்த முயற்சிகள் யாவும் பலனற்றுப்போய் தமிழ் மக்களுக்கு சமத்துவத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவது ஸ்ரீலங்கா அரசிற்குள் சாத்தியமல்ல என்ற முடிவிற்கு இறுதியில் வந்தன என்பதை நினைவுகூர்ந்து;

25. இம்முடிவினை அடைவதற்கு முன்னராக கூட்டாட்சியின் கீழோ தன்னாட்சியின் கீழோ தீர்வைக்கண்டுகொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் மறுக்கப்பட்டு வறிதாக்கப்பட்ட நிலையில் தமிழர்களுக்கான அரசியல் உரிமைகளினைத் தனியான அரசியல் அதிகார அலகொன்றினாலேயே உறுதிப்படுத்தமுடியும் என்று வலியுறுத்தியதை குறித்துக்கொண்டு;

26. 1977இல் நாடாளுமன்ற இறுதி உரையில் திரு. செல்வநாயகம் அவர்கள் கூட்டாட்சிக்கான முயற்சிகள் யாவும் வற்றிப்போயுள்ள நிலையில் தமக்கான ஆட்சியதிகாரத்தை அமைத்துக்கொள்ளத் ஈழத்தமிழருக்கிருக்கும் வரலாற்று உரிமையின் கீழ் சுதந்திரமான தமிழரசை உருவாக்குவதன் மூலமே ஈழத்தமிழர்களின் கூட்டுரிமையும் பாதுகாப்பும் வலுப்படும் என்று தெரிவித்ததை மீள வெளிப்படுத்திக்கொண்டு;

27. இம்முடிவானது தீவிரவாதக் கருத்துருவாக்கத்தால் உருவானதல்ல. மாறாக அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசுகள் ஒப்பந்தங்களை மதிக்காது விட்டதாலும் சனநாயக மக்களாணையை மதிக்கத் தவறியதாலும், அரசியலமைப்பின் ஊடாக சமத்துவத்தையும் பாதுகாப்பையும் வழங்கத்தவறியதாலுமே எழுந்தது என்பதை அறிவுறுத்திக்கொண்டு;

28. 1977ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஈழத்தமிழ் மக்கள் தமக்குக் கிடைத்த சனநாயக வாய்ப்பைப் பயன்படுத்தி தம்மிடமிருந்து பிரிக்கமுடியாத சுயநிர்ணய உரிமையை வலுப்படுத்தும் வட்டுக்கோட்டைத் தீர்மாத்திற்கு அமைய மக்கள் பேராணையாக சுதந்திர இறையாண்மைகொண்ட தனி அரசியல் அலகை உருவாக்கும் ஆணையை வழங்கியதை மீள நினைவுபடுத்திக்கொண்டு;

29. சனநாயகத்தின் கீழ் வழங்கப்பட்ட இவ் ஆணையை 1983இல் 6ஆவது திருத்தச் சட்டத்தை அரசியலமைப்பின் ஊடாக அமுலாக்கி வறிதாக்கியதையும் இத்திருத்தச் சட்டத்தின் ஊடாக சுயநிர்ணய உரிமைக்கான அமைதிப் பிரசார நடவடிக்கைகளைக் கூட குற்றமாக்கியமையானது பன்னாட்டுச் சட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்றன என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் குறித்துக்கொண்டு;

30. தீர்வொன்றைக் கண்டுகொள்ள அமைதியான அரசியலமைப்பு வழிமுறைகள் யாவும் முற்றாக வலுவிழந்த நிலையில், ஸ்ரீலங்கா அரசு ஒருதரப்பாகப் பங்கேற்றதும், பன்னாட்டு அரசுகளால் வழிநடத்தப்பட்டதுமான போர்நிறுத்த ஒப்பந்த கட்டமைப்புக்குள் பன்னாட்டுச் சட்டப் பொறிமுறைகளுக்கு அமைவாக சுயாட்சி, மீள்கட்டமைப்பு, மனித உரிமைகளின் பாதுகாப்பு போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு சுயநிர்யண உரிமைக்குப் பங்கம் விளைவிக்காத

வகையில் பேச்சுவார்த்தைகளின் ஊடாக 2003இல் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவைத் தமிழ் மக்கள் முன்மொழிந்ததை மீளநினைவிற்குக் கொண்டுவந்து;

31. ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்திக்கொண்டு மதச்சார்பற்ற அரசு, சமூகங்களிடையே சமத்துவம், பன்னாட்டு மேற்பார்வை, நீதி ஆகியவற்றை வலியுறுத்தி அமைதியானதும் சனநாயக வழிமுறைகளின் ஊடாகவும் நல்ல நம்பிக்கையுடன் மோதலைத் தவிர்ப்பதற்கான முயற்சியாகவும் இவ் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபு அமைந்திருந்ததுடன் அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அனைத்து அரசியலமைப்பு ஏற்பாடுகளும் தோல்வியடைந்ததை வெளிப்படையாக அறிவுறுத்தியதை குறித்துக்கொண்டு;

32. போர் 2009இல் உச்சமடைந்தபோதிலும் ஈழத்தமிழ் மக்கள் தமது இறையாண்மையை அடகுவைக்கவோ தாமாகக்கைவிடவோ இல்லை என்பதையும், பன்னாட்டுச் சட்டங்களின் கீழ் அவர்களுக்கிருக்கும் அரசியல் அந்தஸ்த்தையோ உரிமைகளையோ அழித்தொழிக்கவோ அல்லது நிறுத்திவைக்கவோ இல்லை என்பதையும், அவர்களது கூட்டு அரசியலுரிமையை சட்டபூர்வமாக மாற்றிக்கொடுக்கவோ அல்லது அவ்வுரிமையை நீக்கக்கூடிய எந்தவொரு சரணடைதலையோ தலைவணங்கலையோ நிகழ்த்தவில்லை என்பதனையும் அங்கீகரித்து;

33. ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்ததால் எழுந்த ஆயுதப் போராட்டத்தின் பின்புலத்திலும் தமிழர் தரப்பானது 1949ஆம் ஆண்டின் ஜெனீவா வரைபையும் அதன் மேலதிக நடபடிமுறைகளையும் அங்கீகரித்து பன்னாட்டு மனிதாபிமானச் சடங்களுக்கமைவாக நடக்கமுயன்றமையால் மோதலை ஶ்ரீலங்காவின் உள்நாட்டு நீதிபரிபாலன எல்லைகளைத் தாண்டிப் பன்னாட்டுச் சட்ட வரம்பிறகுள் உள்ளீர்க்கப்பட்டதை குறித்துக்கொண்டு;

34. 2009இற்குப் பின்னர் ஶ்ரீலங்காவில் வாழும் ஈழத்தமிழரும், உலகெங்கும் பரந்து வாழும் புலம்வதியும் ஈழத்தமிழரும் தமது அரசியல் வேணவாவை தொடர்ச்சியான சனநாயக வழிமுறைகளின் ஊடாக வெளிப்படுத்தியதை, விசேடமாக பல்வேறு நாடுகளில் 2009 மற்றும் 2010 இல் நிகழ்த்தப்பட்ட பொதுவாக்கெடுப்புகள் உட்பட, 1977இல் ஈழத்தமிழ் மக்களால் வழங்கப்பட்ட ஆணை மற்றும் சுயநிர்ணய உரிமைக்கான பேராணையை உறுதிப்படுத்தியதை மீள ஞாபகப்படுத்திக்கொண்டு;

35. இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளுக்கான பன்னாட்டு விசாரணை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் ஈழத்தமிழ்த் தாயகப் பிரதேசத்திலும் புலம்வதியும் தேசங்களிலும் பொதுவாக்கெடுப்பை நிகழ்த்த வேண்டும் என 2013ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் சட்டமன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் குறித்துக்கொண்டு;

36. இனப்படுகொலை நிகழ்துள்ளதற்கான நம்பத்தகு ஆதாரங்கள் உள்ளன என்றும் பன்னாட்டுச் சமூகம் இக்குற்றத்தைத் தடுக்கவும் தண்டிக்கவும் தனக்கிருந்த பொறுப்பைத் தவறவிட்டுள்ளது என 2014இல் பிறீமனில் நிகழ்ந்த நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் இறுதி முடிவுகளை ஞாபகப்படுத்திக்கொண்டு;

37. ஈழத்தமிழ் மக்களின் மீது இனப்படுகொலையே நிகழ்ந்தது என்றும் அக்குற்றத்தை விசாரணைக்குட்படுத்துவதற்குப் பொருத்தமான பன்னாட்டு பொறுப்புக்கூறும் பொறிமுறையினை வலியுறுத்தியும் 2015இல் வடமாகாண சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மேலும் ஞாபகப்படுத்திக்கொண்டு;

38. 2009இன் இறுதிப்போருட்பட ஈழத்தமிழ் மக்களின் மீது நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலைதான் என்ற குற்றச்சாட்டை விசாரணை செய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையானது சுதந்திர பன்னாட்டு விசாரணைப் பொறிமுறையை உருவாக்க வேண்டும் என கனடாவின் மக்கள் பிரதிநிதிகள் சபை 19 ஜுன் 2019இல் நிறைவேற்றிய தீர்மானத்தை குறித்துக்கொண்டு;

39. ஐக்கியநாடுகளின் பொறிமுறைகளின் ஊடாகக் கண்டறியப்பட்ட பன்னாட்டு மனித உரிமைச் சட்ட மீறல்கள் மற்றும் மனிதாபிமானச் சட்டமீறல்களை ஞாபகப்படுத்திக்கொண்டு;

40. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சபையில் ஸ்ரீலங்காவின் மீது 2015இல் 30-1இல் ஆரம்பித்து நிறைவேற்றப்பட்ட பல்வேறு தீர்மானங்களும் நல்லிணக்கத்தையும், மனித உரிமைக்கான உத்தரவாதத்தையும், கடுங்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறலையும் வேண்டிநின்றதையும் அவற்றுள் தீர்மானம் 30-1ஐ ஸ்ரீலங்கா அரசு தானும் ஏற்றுக்கொண்டு முன்மொழிந்ததையும், பின்னர் அவ்வாறு ஏற்றுக்கொண்டதை விட்டுவிலகியதுடன் சுதந்திர விசாரணை மற்றும் வினைத்திறனான நிலைமாறுகால நீதியை வழங்கும் பொறிமுறையினைக் கட்டியெழுப்பும் பொறுப்புற்பட தனது பொறுப்புகளை நிறைவேற்ற மறுத்ததையும் குறித்துக்கொண்டு;

41. தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் (34-1, 37-1, 40-1, 46-1, 51-1 மற்றும் தொடர்ந்தவை) மனித உரிமை ஆணையாளரலுவலகத்தின் மேற்பார்வையில் பொறுப்புக் கூறல் கட்டமைப்பையும் பன்னாட்டுக் குற்றங்களுக்கான சான்றுகளைத் திரட்டி, ஆராய்ந்து, எதிர்கால நடவடிக்கைகளுக்காக பதுகாக்கும் நுட்பத்தை மீளுறுதிப்படுத்தியதை ஞாபகப்படுத்திக்கொண்டு;

42. தொடர்ந்து ஆட்சிக்குவரும் ஸ்ரீலங்கா அரசுகள் இந்தத் தீர்மானங்களுடன் இணங்கியொழுகுவதை முற்றாக நிராகரித்து வந்ததுடன் சான்றுகளைத் திரட்டும் வெளியக முயற்சிகளை வெளிப்படையாக எதிர்த்தபடி, வெளியகச் சீராய்வு முயற்சிகளுக்குத் தடைகளை ஏற்படுத்தியபடி, சுதந்திரமற்ற, பக்கச்சார்பான, வினைத்திறனற்ற பொறிமுறையாக இருந்த போதிலும் உள்நாட்டுப் பொறிமுறையே, பொறுப்புக்கூறுவதற்குப் பொருத்தமானது என்று தெரிவித்து வருவதனைக் கருத்திலெடுத்துக்கொண்டும்;

43. இந்நடவடிக்கைகளால் ஐக்கிய நாடுகள் சபையின் பொறிமுறைகள், விசேடமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் உயர்ஸ்தானிகரின் மேற்பார்வையின் கீழ் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க சனாதிபதி ஆணைக்குழுவினால் குறிப்பிட்ட கால வரையறைக்குள் (21 பெப்ரவரி 2002 தொடக்கம் 15 நவம்பர் 2011 வரை) விசாரணைகளை மேற்கொள்வதுட்பட, ஐக்கிய நாடுகளின் விசாரணைப் பொறிமுறைகள் வினைத்திறனுடனும் தடைகளின்றியும் வெளிப்படைத் தன்மையுடனும் முழு வரலாற்றுக் காலப்பகுதிக்குமான சான்றுகளைத் திரட்டி குற்றஞ்சாட்டப்படும் இனப்படுகொலைக்கான நோக்கமிருந்ததை கண்டுகொள்ள மீண்டும் மீண்டும் தடைகள் ஏற்படுத்தப்படுவதை மிகுந்த கவனத்துடன் குறித்துக் கொண்டும்;

44. முழுமையான, சுயாதீனமான பன்னாட்டு விசாரணைக் குழுவோ அல்லது உண்மையைக் கண்டறியும் பொறிமுறையோ, உரிய நிலத்தில் உறுதியான சான்றுச் சேகரிப்பு திறனுடன் உருவாக்கப்படாமையுடன் சான்றுகளைத் திரட்டிக்கொள்வதற்காக அவற்றை அணுகவும் அதற்கான ஒத்துழைப்பைப் பெறவும் தொடர்ந்து விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளால் தொலைதூரத்திலிருந்தபடியே சான்றுகளைச் சேகரிக்க உருவாக்கப்பட்ட முறைமைகளும் நிறுவன ரீதியான செயல்முறைளின் மீதே சார்ந்திருக்க வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளன என்பதையும், அவ்வாறான முறைமைகள் சாட்டப்பட்டுள்ள குற்றங்களின் தீவிரத்தையும் சிக்கல்களையும் சரியாக எதிர்கொள்ளப் போதியதல்ல எனப் பரந்தளவில் கருதப்பட்டுள்ளன என்பதையும், மேலும், 2008ஆம் ஆண்டு இறுதியில் வன்னிப் பிராந்தியத்திலிருந்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் பன்னாட்டுப் பணியாளர்கள் இலங்கை அரசின் கட்டளைக்கு அமைய திரும்பிப் பெறப்பட்டமையும் அதன் விளைவாக யுத்த சூனியப் பிரதேச நடவடிக்கைகளில் பன்னாட்டு இருப்பும் கண்காணிப்பும் பின்னர் சான்றுகளின் சேகரிப்பும் குறிப்பிடத்தக்கவகையில் கட்டுப்படுத்தப்பட்டன என்பதையும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைப்பு ரீதியான தோல்விகள்

அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையிலும் அத்தகைய நிறுவனக் குறைபாடுகள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்காக பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் பின்னணியிலும் இருப்பதையும், இவையெல்லாவற்றையும் கருத்திற் கொண்டு, இத்தகைய குறைபாடுகள் தீவிர கவலையை ஏற்படுத்துகின்றன என்பதை மேலும் குறிப்பிட்டு;

45. செம்டெம்பர் 2025இல் ஈழத்தமிழர்களின் தாயகத்திலிருந்து சிவில் சமூகங்களைச் சேர்ந்தவர்களும், மதத்தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் உலகெங்கிலும் புலம்பெயர்ந்தமைந்துள்ள 70இற்கும் மேற்பட்ட அமைப்புகளும் இணைந்து ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட குற்றங்களுக்கு பன்னாட்டுப் பொறுப்புக்கூறல் முறைமையின் தேவையினை ஒரேகுரலில் கூட்டாகக் கோரியதுடன், ரோமச் சட்டத்தின் காலவரம்புச் சார்ந்த வரையறைகளை கருத்தில் கொண்டு பன்னாட்டு நீதிக்கான நீதிமன்றத்தில் (International Court of Justice) அரசின் பொறுப்பை (State responsibility) முன்வைப்பதும், அதேபோல், பன்னாட்டு நீதிப்பொறிமுறை ஒன்றின் மூலம் தனிநபர் குற்றப் பொறுப்பை (individual criminal responsibility) வரையறை செய்வதனைத் தொடர்ந்து நாடுவதும் இதில் உட்படுகின்றன என்பதை மீளநினைவிற்கொண்டும்;

46. இக்கூட்டுக்கோரிக்கை ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வெளிப்படுத்திய அரசியல் ஆணையை மீண்டும் வலியுறுத்தியதுடன் தமது அரசியல் வேணவாவை சுயமாக வெளிப்படுத்தும் உரிமையை 6ஆம் திருத்தச்சட்டம் குற்றமாக்குவதை கண்டித்து எந்தவொரு சனநாயக பயணத்தினை ஆரம்பிக்க வேண்டுமாயின் அதற்கு முதல் இத்திருத்தச் சட்டம் முதலில் நீக்கப்படவேண்டு' என்பதை வலியுறுத்தியதையும் குறித்துக்கொண்டு;

47. ஈழத்தமிழர்களின் சிவில் அமைப்புகளும் பிரதிநிதிகளும் உள்ளக பொறுப்புக்கூறும் பொறிமுறையின் சுதந்திரமற்றதன்மை மற்றும் வினைத்திறனற்ற தன்மைகளைக் கருத்திற்கொண்டு அதனை தொடர்ந்து மறுத்துவருகின்றமையுடன் ஸ்ரீலங்கா அரசானது பன்னாட்டுச் சட்ட மீறல்களால் ஈழத்தமிழ் மக்களின் மீது நிகழ்த்தப்பட்ட குற்றங்கள் தொடர்பாக விசாரணைசெய்யவோ, தண்டனை வழங்கவோ, இழப்பீடுகளை முன்னெடுக்கவோ தோல்வியடைந்துள்ளதனால் பன்னாட்டு நீதிப்பொறிமுறையை வேண்டிநிற்பதை மீள நினைவுபடுத்திக்கொண்டு;

48. பொறுப்புக்கூறலை நிராகரித்துவரும் அதேவேளை இராணுவமயமாக்கும் நிலை தொடர்வதால் கட்டமைப்புசார் இனவழிப்பு தொடர்வதையும் எதிர்வரும் காலத்தில் இத்தொடர்ச்சி பௌதீக இனவழிப்பு நிகழக்கூடிய அபாயத்தை தொடர்ந்து நிலைநிறுத்துகின்றன என்பதனயும் அங்கீகரித்து;

49. பாதுகாப்புச் சபையின் அங்கத்தவர்கள், பிராந்திய பேரரசுகள், உட்பட பன்னாடுகள் அரசியல், இராசதந்திர, புலனாய்வு, இராணுவ, நிதி மற்றும் தந்திரோபாய உதவிகளை மோதலிற்காக ஸ்ரீலங்காவிற்கு வழங்கியபோது அவ்வுதவிகள் பன்னாட்டு மனிதாபிமான, மனித உரிமைகள் சட்டங்களை மீற வழிவகுக்கும், சாமானியர்களின் பாதுகாப்பினைக் கேள்விக்குறியாக்கும் மற்றும் வலுச்சமன்பாட்டைப் பாதிக்கும், என்ற அச்சமிகு அறிவிப்புகள் உறுதியாகவும் தெளிவாகவும் வெளியாகியபோது அதனை வெறும் அரசியல் அறிவிப்பாகப் பார்த்ததையும், இந்தியப் பெருங்கடலின் தந்திரோபாய அணுகலுட்பட்ட பூகோள அரசியல் நலன்களானவை பன்னாட்டுக் குற்றங்கள் நிகழ்வதைத் தடுப்பதனையும் அதற்கான பொறுப்பையேற்பதையும் மீறி எழுந்ததனைக் கவனத்திற்கொண்டு;

50. பன்னாட்டு இராசதந்திர பொறிமுறைக்கட்டமைப்பின் முரண்களின் மத்திய புள்ளியாக இருக்கும் ஐக்கிய அமெரிக்கா சமாதானப் பேச்சுவார்த்தைகளின்பொது பிரதான துணைநாடாக விளங்கி, இராசதந்திரச் சமிக்ஞைகள் (diplomatic signalling), நன்கொடை நிபந்தனைகள் (donor conditionality), மற்றும் மோதலுக்குப் பயன்படுத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புக் கட்டமைப்பு (counter-terrorism architecture) ஆகியவற்றின் மூலம் தீர்மானிப்பான தாக்கத்தைச்

செலுத்தியதையும்; அந்த தாக்கம் தமிழ் அரசியல் செயற்பாட்டு நடவடிக்கைகளை கட்டுப்படுத்தியதையும், தரப்புகளுக்கிடையிலான சமநிலையை (parity) சிதைத்ததையும், மேலும் பன்னாட்டின் ஈடுபாட்டை குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் பொறுப்புக்கூரற் பொறிமுறை போன்றவற்றை விட அரசினை மையமாகக்கொண்டு அதன் பாதுகாப்பே முக்கியத்துவமானது என முன்னுரிமைப்படுத்தும் வகையில் வடிவமைத்ததையும் கவனத்தில் கொண்டு;

51. நிலையான அரசியல், இராசதந்திர, இராணுவ உதவிகளை ஸ்ரீலங்கா அரசிற்கு நல்கிய மக்கள் சீனக் குடியரசானது 2009இற்குப் பின்னரும் பன்னாட்டு மனித உரிமைச் சட்டம் மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டு நம்பத்தகுந்தவகையிலிருக்கின்ற போதிலும் அரசைப் பலப்படுத்தும் நோக்குடன் இராணுவமயமாதலை மேலம் வேரூன்றச்செய்யும் வகையில் செயற்படுவதைக் குறித்துக்கொண்டு;

52. உள்ளகச் சுயநிர்ணயஉரிமையினைப் பெற்றும்கொள்ளும் அனைத்து வழிகளும் வற்றிப்போயுள்ளமையானது பன்னாட்டுச் சட்டங்களின் கீழான வெளியகச் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தும் நிலையினை உருவாக்குகின்றது என்பதனை அறுதியாக்கிக்கொண்டு;

53. ஈழத் தமிழ் மக்களின் பறிக்க முடியாத சுயநிர்ணய உரிமையானது தொடர்ந்து பதவிக்குவரும் அரசுகளின் நற்பண்புகளின் மீதோ அல்லது அரசியலமைப்பு விருப்பங்களின் மீதோ சார்ந்திருப்பவையல்ல; திணிக்கப்பட்ட ஒற்றையாட்சிக் (unitary) கட்டமைப்பிற்குள் பேச்சுவார்த்தை மூலம் கிடைக்கும் சமநிலைக்குக் குறுக்கப்பட்டதுமல்ல; மாறாக, பன்னாட்டுச் சட்டத்திற்கிணங்க, பன்னாட்டுக் கண்காணிப்பின் கீழ் நடைபெறும் சுயநிர்ணயச் செயலின் மூலம் சனநாயக ரீதியாக வெளிப்படுத்தப்படக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதை மேலும் அறுதியாக்கிக்கொண்டு;

54. காலனித்துவ அதிகாரத்தைச் செலுத்திய ஐக்கிய இராச்சியம், பிராந்திய சக்தியாகவும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்கிய நாடாகவுமுள்ள இந்தியா, அமைதிச் செயன்முறையில் முன்நிலைவகித்த நோர்வே மற்றும் இணைத் தலைமைநாடுகள், அவற்றுள் முக்கிய இணைத்தலைமை நாடாகவும் மூலோபாயத் தீர்மான சக்தியாகவும் திகழும் அமெரிக்கா, போர் நிறுத்தக்காலப்பகுதியில் மேற்கொண்ட தடை அறிவிப்பினால் அமைதிச் செயன்முறையில் தரப்புகளுக்கிடையோன சமநிலையை இல்லாதொழித்த ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனடா, ஸ்ரீலங்கா அரசிற்கு இராணுவ மற்றும் அரசியற் பெரும் பங்காளியாகத் திகழும் சீனா, பன்னாட்டு அமைதிக்கும் மனித உரிமைகளிற்கும் உத்தரவாதமளிக்கும் அமைப்பான ஐக்கியநாடுகள் சபை, ஆகியோருக்கு உள்ள பங்கையும் பொறுப்புகளையும் அங்கீகரித்து;

55. பன்னாட்டுச் சட்டத்தின் உச்சப்பொறுப்பானது இனஅழிப்பைத் தடுப்பதே என்பதையும், இனக்குழுமமொன்று தனது சுயநிர்ணய உரிமையினை அனுபவிப்பது ஒப்பீட்டளவில் துல்லியத்தெளிவுடன் பன்னாட்டுச் சட்ட வழக்காறாக மாறி இனப்படுகொலை வரைபு போன்ற பன்னாட்டு வரைபுகள், உடன்பாட்டுச் சட்டங்களாக முகிழ்த்து அனைத்து நாடுகளுக்குமான கட்டாயக் கடமைகளாகவுள்ளன என்பதை உறுதிப்படுத்தி;

இவற்றின் அடிப்படையில் பின்வரும் பிரகடனம் இத்தால் ஏற்றுக்கொள்ளப் படுகின்றது.

**திருகோணமலைப் பிரகடனம் 2026**
**14 பெப்பிரவரி 2026**

## I ஈழத்தமிழ் மக்கள்

1. ஈழத்தமிழ் மக்கள் தேசத்தைக் கொண்ட ஓர் தனித்துவம்மிக்க மக்கள் குழுமத்தினர் ஆவர்.
2. வரலாற்றுத் தொடர்ச்சி, ஒரு பொதுவான மொழி மற்றும் பண்பாடு, ஒரு கூட்டு அரசியல் அடையாளம், என்பவற்றுடன் வரையறுக்கப்பட்ட பாரம்பரிய தாயகம் போன்ற பண்புகளைக் கொண்டவர்கள்.
3. பன்னாட்டுச் சட்டத்தின் கீழ், 1948ம் ஆண்டு இனப்படுகொலைச் சாசனம் உள்ளடங்கலாக பாதுகாக்கப்பட்ட தேசியக் குழுமம் என்ற தகுதியைக் கொண்டவர்கள்.
4. ஈழத்தமிழ் மக்கள் என்ற பதம் பின்வரும் அனைவரையும் உள்ளடக்குகின்றது:
    i. ஈழத்தமிழ் மரபுரிமையின் உறுப்பினர்கள் என அடையாளப் படுத்தப்படுபவர்கள்,
    ii. பண்பாட்டு ரீதியாகவும் மூதாதையர் வழியாகவும் தாயகத்துடன் தொடர்புகளைக் கொண்டவர்கள்,
    iii. தீவின், இணைந்துள்ள வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளை தங்களது வரலாற்று ரீதியான, பாரம்பரியமான, மற்றும் இலட்சியத் தாயகமாகக் கொண்டவர்கள்.
5. இங்கு தரப்பட்டுள்ள வரைவிலக்கணம், ஈழத்தமிழ் மக்கள் என அடையாளப்படுத்தப்படாத ஏனைய தமிழ் பேசும் மக்களின், தனித்துவ அடையாளம், சமயப் பண்பு, அல்லது அவர்களது உள்ளக சுயநிர்ணய உரிமைகள் எவற்றையும் நிராகரிக்காது.

## II. தாயகம், பிரதேசம், கடல்சார் வெளி

1. ஈழத்தமிழ் மக்களின் தாயகம், தீவின் இணைந்த வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளை உள்ளடக்குகிறது
2. இந்தத் தாயகம் அதன் தரைப்பிரதேசம், அதனுடன் இணைந்த கடல்கள் உள்ளிட்ட தொடர்புபட்ட கடல்சார் வெளி, வரலாற்றுக் கடல் வலயங்கள் ஆகியவற்றுடன் ஈழத்தமிழ் மக்களால் பாரம்பரியமாகப் பயன்படுத்தப் பட்ட மற்றும் தங்கி வாழ்ந்த கடல்களையும் உள்ளடக்குகிறது.
3. வரலாற்றுப் பதிவுகள், காலனீய நிர்வாகம், சனத்தொகைச் சான்று, வரைபடவியல் ஆவணங்கள் போன்றவை தமிழர் தாயகத்தின் பிரதேச ரீதியான தொடர்ச்சியை உறுதிப்படுத்துகின்றன.
4. இப்பிரதேசத்தின் ஒருமைப்பாடு அங்கு வாழும் மக்களின் அரசியல் உரிமைகளிலிருந்து எவ்வகையிலும் பிரிக்கப்பட முடியாததாகும்.

## III. காலனீயம் ஏற்படுத்திய இழப்பும் சட்டபூர்வமற்ற அரசியலமைப்பும்

1. தமிழ் மக்களின் இறைமை காலனீயத்தால் இல்லாதொழிக்கப்பட்டதுடன் ஒருபோதும் மீளப்பெற்றுக்கொள்ளப்படவில்லை.
2. அதனால் பூர்வீகமாகவும், வரலாற்று ரீதியாகவும் வேர்களைக் கொண்ட மக்களுக்கு பன்னாட்டு ரீதியாக வழங்கப்படும் பாதுகாப்பு நடைமுறைகளின் கீழ் ஈழத்தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை ஒரு சிறுபான்மை மக்களின் பிரச்சினையாக அல்லது வெறும் பண்பாட்டு விடயம் என்ற குறுகிய வரையறைகளுக்குள் அடக்கிக் காலனீயம் ஏற்படுத்திய இந்த இழப்பானது வரலாற்று ரீதியான அரசியல் அதிகாரம், பிரதேச ரீதியான ஆட்சி, நில உரிமை ஒழுங்கமைப்புகள், பண்பாட்டுத்

தொடர்ச்சி போன்றவை ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் சீர்குலைக்கப்பட்டு வந்தன.

3. 1947 ஆண்டின் சோல்பரி அரசியலமைப்பானது தமிழ் மக்களின் உடன்பாடின்றி, ஓர் ஒற்றையாட்சி அரசியலமைப்பை தமிழ் மக்கள் மேல் திணித்தது.
4. 1972 மற்றும் 1978ஆம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்புகள், சிங்களப் பேரினவாதத்தைப் புகுத்தியதனால் சமத்துவத்துக்கான பாதுகாப்புக்கள் இல்லாதொழிந்தன.
5. இந்திய - இலங்கை ஒப்பந்தமும் அந்த ஒப்பந்தந்தினால் அரசியலமைப்பில் புகுத்தப்பட்ட விடயங்களும் தமிழ் மக்களின் இறைமையை அங்கீகரிக்கத் தவறின.
6. 1995 மற்றும் 2019களில் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பு முன்மொழிவுகள், சீர்திருத்தங்கள் என்ற பெயரில் முன்வைக்கப்பட்ட பொழுதிலும், மைய மேலாதிக்கம், மக்களுக்கிடையில் மறுக்கப்பட்ட சமத்துவம் போன்ற பண்புகளைக் கொண்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பு ஒழுங்குமுறையை ஆழப்பதியச் செய்து, ஈழத்தமிழ் மக்களின் கூட்டு அரசியல் அடையாளத்தையும், சனநாய வழியிலான சுய வெளிப்பாட்டையும் கட்டுப்படுத்தியது அல்லது சட்டபூர்வமற்றதாக்கியது.
7. இவ்வாறான வரைபுகளுக்குக் கூட்டாக எந்தவித சட்டபூர்வத் தன்மையும் கிடையாது என்பது மட்டுமன்றி, ஒரு நீதியான தீர்வுக்கான அடித்தளங்களாக இவை திகழப்போவதில்லை.

## IV. உள்ளக சுய நிர்ணய முயற்சிகள் அனைத்தும் தீர்ந்துபோய்விட்டன

1. ஈழத்தமிழ் மக்கள் பல தசாப்தங்களாக அமைதி வழியிலும் அரசியலமைப்புப் பரிகாரங்கள் ஊடாகவும் பல தடவைகளில் இம்முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றனர்.
2. அவ்வாறான அனைத்து முயற்சிகளும் நிராகரிக்கப்பட்டு, அடக்குமுறையும் வன்முறையும் ஏவப்பட்டதன.
3. தமிழ் அரசியல் தாபனங்கள் அழிக்கப்பட்டமையும், தமிழ் மக்கள் மேல் பெருமளவில் பன்னாட்டுக் குற்றங்கள் இழைக்கப்பட்டமையும், உள்ளக சுயநிர்ணய உரிமைக்கான எஞ்சிய அனைத்து வாய்ப்புகளையும் இல்லாதொழித்துவிட்டன.
4. எனவே உள்ளக சுயநிர்ணய உரிமையைக் கையிலெடுக்கும் அனைத்து வாய்ப்புகளும் தீர்ந்துவிட்டன.

## V. பன்னாடுகளுக்குள்ள பொறுப்பு

1. தீவில் வரலாற்றுக் காலத்தில் இருந்த அரசியல் மற்றும் பிரதேச ரீதியிலான ஒழுங்கமைப்புகளைச் செயலிழக்கச் செய்து, மையத்தில் குவிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டதும், ஒற்றையாட்சிப் பண்பைக் கொண்டதுமான அரச கட்டமைப்பை காலனீய காலத்தில் கட்டமைத்து, சமத்துவமற்ற ஆட்சி முறைமையை ஆழப்பதியச் செய்து, மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் காலனீயத்திலிருந்து வெளியேறும் ஒரு செயன்முறையை அறிமுகப்படுத்தத் தவறியதற்கு **ஐக்கிய இராச்சியம்** பொறுப்பேற்கிறது.
2. பிராந்திய ரீதியாக தான் ஆற்றிய பங்குக்காகவும், ஈழத்தமிழ் மக்களின் தாயகத்தின் அரசியல் நிலைப்பாட்டையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் அங்கீகரிப்பதற்குப் பதிலாக, அவற்றை நீர்த்துப்போகச் செய்த, ஓர் அதிகாரப்பரவலாக்கல் வரைபைத் திணித்த, 1987ம் ஆண்டின் இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்துக்கு **இந்தியா** பொறுப்பேற்கிறது. சிறீலங்கா அரசின் ஒற்றையாட்சிப் பண்பை பேணிப்பாதுகாத்துக் கொண்டு, மட்டுப்படுத்தப்பட்டதும் மீளப்பெறப்படக்கூடியதுமான ஒரு தன்னாட்சி வடிவத்தை நிறுவனமயமாக்கி, இவ்வாறான பல செயற்பாடுகள் ஊடாக

சுயநிர்ணயப் பிரயோகத்தைக் கட்டுப்படுத்தி, இராணுவ மயமாக்கலையும் மையக்கட்டுப்பாட்டையும் இவ் ஒப்பந்தம் ஆழப்பதியச் செய்தது. உறுதித்தன்மையைப் பேணுவதாகக் கூறிக்கொண்டு, **இந்தியா** தொடர்ந்து முன்னெடுத்த அரசியல், பாதுகாப்பு மற்றும் இராசதந்திர செயற்பாடுகளானவை பிரச்சினையின் அடிப்படைக் காரணிகளில் கவனஞ்செலுத்தத் தவறியதுமட்டுமன்றி, அதற்குப் பதிலாக தொடர்ச்சியான அடக்குமுறைக்கு வழிகோலிய கட்டமைப்பு ஒழுங்குகளை சட்டபூர்வமாக்கியது.

3. தமிழ் மக்களுக்கான, அமுலாக்கப்படக்கூடிய அரசியல் அல்லது சட்டபூர்வ உத்தரவாதங்களை அளிக்காத ஓர் அமைதிச் செயன்முறையை ஊக்குவித்ததற்கு **நோர்வேயும் இணை அனுசரணை நாடுகளும்** பொறுப்பேற்கின்றன. அமைதிச் செயன்முறையில் தனது ஊக்குவிப்புத் தொடர்பாக 2011ம் ஆண்டில் **நோர்வே** உத்தியோகபூர்வமாக மேற்கொண்ட மதிப்பீடானது கட்டமைப்பு ரீதியிலான குறைபாடுகள், தரப்புக்களுக்கிடையேயான சமத்துவமின்மை, செயற்றிறன்மிக்க பன்னாட்டுப் பாதுகாப்புகள் இன்மை போன்ற விடயங்களிருந்ததை ஏற்றுக்கொண்டிருந்தது. பொறுப்புக்கூறும் பொறிமுறைகளையோ அல்லது மீறமுடியாத பன்னாட்டு அர்ப்பணிப்புகளையோ உறுதிப்படுத்தத் தவறியது மட்டுமன்றி, இவற்றின் காரணமாக போர்நிறுத்தம் செயலிழப்பதற்கும் அதன் பின்னர் பாரிய அளவில் பன்னாட்டுக் குற்றங்கள் இழைக்கப்படவும் வழிவகுத்தது.
4. அமைதிச் செயன்முறையின் முதன்மை இணை அனுசரணை நாடு என்ற அடிப்படையில், தான் ஆற்றிய பங்கின் காரணமாகவும், பன்னாட்டுக் கட்டமைப்பை வடிவமைக்கும் சக்தி வாய்ந்த அரசியல் மற்றும் மூலோபாயப் பங்காளி என்ற தோரணையிலும், **ஐக்கிய அமெரிக்கா** தனித்துவம்மிக்க உயர்மட்டப் பொறுப்பைச் சுமக்கிறது. இராஜீக சமிக்ஞைகள், நிதி வழங்குவோருக்கான நிபந்தனைகள், போரிற் பிரயோகிக்கப்பட்ட பயங்கரவாதத்துக்கு எதிரான கட்டமைப்பு போன்றவற்றில் தான் கொண்டிருந்த செல்வாக்கு காரணமாக, பேச்சுவார்த்தைகளின் கட்டமைப்பு மீதும் அதன் வரையறைகள் மீதும் தீர்க்கமான பிடியை **ஐக்கிய அமெரிக்கா** கொண்டிருந்தது. பாரதூரமான பன்னாட்டுக் குற்றங்கள் இழைக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது என நம்பத்தகுந்த மற்றும் தொடர்ச்சியான எச்சரிக்கைகள் வழங்கப்பட்ட பொழுதிலும், சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கிடையே சமத்துவத்தை நிலைநாட்டுவதையும், அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்பையும் பேணுவதற்கும் பதிலாக மூலோபாய நலன்கள், அரசை மையமாகக் கொண்ட இராணுவ ஒத்துழைப்பு, ஏற்கனவே உள்ள அரசியலமைப்பு ஒழுங்கு போன்றவற்றுக்கே **ஐக்கிய அமெரிக்கா** முன்னுரிமை வழங்கியது. ஓர் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு செயன்முறையை அங்கீகரித்தமை, பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை பிரயோகித்தமை, போர்நிறுத்த ஒப்பந்தம் முற்றாக மீறப்பட்ட போது அதற்குத் தண்டனைகள் வழங்கப்படாமை போன்றவை தமிழ் மக்களின் அரசியல் சக்தியைப் பலவீனப்படுத்தி, அதிகாரச் சமநிலையைச் சீர்குலைத்து, போர்நிறுத்தம் செயலிழந்து, பாரிய அளவில் பன்னாட்டுக் குற்றங்கள் இழைக்கப்படுவதற்கு ஏதுவான சூழலைத் தோற்றுவித்தது.
5. அமைதிப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற காலப்பகுதியில், தொடர்புபட்ட தரப்பினரிடையே இருந்த சமநிலையை மாற்றியமைத்த பட்டியலிடும் (designation) செயற்பாடுகளுக்கான பொறுப்பை **ஐரோப்பிய ஒன்றியமும் கனடாவும்** ஏற்கின்றன.
6. நாட்டின் உள்ளக மோதலின் பல்வேறு காலப்பகுதிகளில், 1971, மற்றும் 1987-89 ஜேவிபி கிளர்ச்சியை அடக்கிய காலங்கள் உள்ளடங்கலாகவும் மிக

விசேடமாக ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான ஆயுத மோதல் காலப்பகுதியில், சிறீலங்கா அரசுக்குக்குத் தான் வழங்கிய அரசியல், இராசதந்திர மற்றும் இராணுவ உதவிகளுக்காகவும் **சீன மக்கள் குடியரசு** பொறுப்பேற்கிறது. பன்னாட்டு மனித நேய மற்றும் மனித உரிமைச் சட்டம், பாரிய அளவிலும் கட்டமைக்கப்பட்ட முறையிலும் மீறப்படுவதை முழுமையாக அறிந்த பின்பும், வழங்கப்பட்ட உதவி அரசின் அடக்குமுறை இயந்திரத்தை வலுவூட்டி, இராணுவமயமாக்கலை ஆழமாக வேரூன்றச் செய்தது மட்டுமன்றி, பன்னாட்டுக் குற்றங்கள் இழைக்கப்படவும் தொடரவும் வழிவகுத்தது. கருத்தியல் நிலைத்தன்மைக்குப் பதிலாக, புவிசார் அரசியல் சார்புகளை அடிப்படையாகக் கொண்ட அவ்வாறான நடத்தைகளினால், இனப்படுகொலை மற்றும் எவ்விதத்திலும் மீற முடியாத சட்டங்கள் மீறப்படுவது உள்ளிட்ட பன்னாட்டு ரீதியாகத் தவறான செயற்பாடுகளை மேற்கொள்ள உதவுவதை பன்னாட்டுச் சட்டம் தடுக்கிறது.

7. **அரசுகள் அனைத்தும்** erga omnes ( பன்னாட்டு ரீதியாக ஓர் அரசு கொண்டிருக்கும் கடமைகளையும் உரிமைகளையும் குறிக்கும்) மற்றும் erga omnes partes (ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் ஒப்பமிட்ட ஓர் அரச தரப்பு அந்த ஒப்பந்தத்தில் ஒப்பமிட்ட ஏனைய அனைத்துத் தரப்பினர் மட்டிலும் கொண்டிருக்கும் கடமைகளைக் குறிக்கும்) பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் இனப்படுகொலை சாசனம் மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக அந்த உரிமையிலிருந்து பிறக்கும் அனைத்து மீறமுடியாத (jus cogens) விதிகள், இனப்படுகொலையைத் தவிர்த்தல், பொறுப்புக்கூறுவதை உறுதிப்படுத்தல், என்பவற்றுடன் பன்னாட்டுச் சட்ட மீறல்களிலிருந்து உருவாகும் அனைத்துச் சந்தர்ப்பங்களையும் அங்கீகரிப்பதிலிருந்தும் அவற்றுக்கு ஆதரவளிப்பதிலிருந்தும் விலகிக்கொள்ளல் என்பவை உள்ளிட்ட விடயங்களுக்கு பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் பொறுப்பைக் கொண்டிருக்கின்றன.
8. நம்பத்தகுந்த எச்சரிக்கைகள் வழங்கப்பட்டபோதிலும் பேராபத்திருப்பதற்கான வாய்ப்புகள் ஆவணப்படுத்தப்பட்டபோதும் காலத்துக்கேற்றதும் போதிய அதிகாரத்தையும் தன்னகத்தே கொண்டதுமான **ஐக்கிய நாடுகள் சபை** பன்னாட்டு விசாரணைப் பொறிமுறை ஒன்றை உரிய நேரத்தில் செயற்படுத்தாமை உட்பட தடுப்பதிலோ, பாதுகாப்பளிப்பதிலோ, பொறுப்புக்கூறுதலிலோ சந்தித்த தோல்விகளுக்காகப் பொறுப்பேற்கின்றது. இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஐ.நாவின் நடவடிக்கைகள் தொடர்பான உள்ளக ஆய்வுகளானவை பாதிக்கப்பட்ட மக்கள் குழுமம் நிலையாக ஏனைய பன்னாட்டுக் குற்றங்கள் உட்பட இனப்படுகொலைச் செயன்முறைக்கு உள்ளாகிவருகின்றது என்ற முன்கூட்டிய எச்சரிக்கைகள் வழங்கப்பட்டிருந்த போதும் அதனைக் கண்டுபிடிப்பதற்கான, பதிவுசெய்வதற்கான அரசியல் முயற்சிகளையோ, நிறுவன நடவடிக்கைகளையோ எடுப்பதில் ஒழுங்கமைக்கப்பட்ட குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை இனங்கண்டிருக்கின்றன.
9. இனப்படுகொலைச் சாசனத்தின் கீழும், மற்றும் பன்னாட்டுச் சட்டத்தின் ஏனைய மீறமுடியா விதிகள் போன்றவற்றின் ஒளியிலும், சிலோன் அல்லது சிறீலங்காவைத் தொடர்ச்சியாக ஆட்சிசெய்த அரசுகள் மற்றும் நிறுவனக்கட்டமைப்புகள் போன்றவற்றில், அந்த முழுமையான கால நீட்சிக்குள், இனப்படுகொலை எண்ணத்தை உள்ளடக்கிய மாதிரிகள், கொள்கைகள் மற்றும் சமிக்ஞைகளைத் தேடிக்கண்டுபிடிப்பது உள்ளிட்ட, பன்னாட்டுக் குற்றங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகளால் முன்னெடுக்கப்படும் சான்றுகளைப் பேணுதல் மற்றும் விசாரணைப் பொறிமுறைகள் என்பவற்றுக்கு போதிய அதிகாரமும் வளங்களும் வழங்கப்படவேண்டும். இனப்படுகொலை இழைக்கப்பட்டது என

முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள், கால மற்றும் அரசியல் வரையறைகள் இன்றி, பன்னாட்டுச் சட்டத்துக்கு இசைவாக, பன்னாட்டு நீதிக்கான நீதிமன்றத்தின் முன்பாக (International Court of Justice) வைக்கப்பட்டு, நீதிவிசாரணையை எதிர்நோக்கக் கூடிய தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

## VI. பன்னாட்டு ரீதியாக உத்தரவாதமளிக்கப்படும் சுயநிர்ணயம்

1. முன்வைக்கப்படும் எந்தவிதமான அரசியல் தீர்வுக்கும் பன்னாட்டு ரீதியாக உத்தரவாதம் வழங்கப்படவேண்டும்.
2. உள்நாட்டு அரசியலமைப்பு முன்னெடுப்புகள் மட்டும் போதுமானவையல்ல என்பதுடன் அவை எந்தவிதமான சட்டபூர்வத்தன்மையும் அற்றவை.
3. நியாயபூர்வமான எந்தத் செயன்முறையும் பின்வரும் அம்சங்களை உள்ளடக்க வேண்டும்.
    i. பன்னாட்டு மத்தியஸ்தம்
    ii. எந்தவிதத்திலும் மீறப்படுவதற்கு இடமளிக்காத நடுவர் மன்றம்
    iii. நடைமுறையில் அமுல்நடத்தக்கூடிய உத்தரவாதங்கள்
    iv. சுயாதீனக் கண்காணிப்புச் செயன்முறை
4. பன்னாட்டுச் சட்டத்தின் கீழ், சுயநிர்ணயத்தை (உரிமையை) பிரயோகிப்பதற்கு குறித்த செயன்முறை இடமளிக்க வேண்டும்
5. எழுந்தமானமாகத் தடுத்து வைக்கப்படுதல், தடைசெய்தல், அமைதியான அரசியல் வெளிப்பாடுகளைக் குற்றமயப்படுத்துதல் போன்றவற்றை அனுமதிக்கும் எந்தவிதமான அவசரகால மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டமுறைமைகள் அல்லது அவ்வாறான அதிகாரங்களைப் பொருளில் அல்லது விளைவில் ஏற்படுத்தக்கூடிய எந்தவித மாற்றீடும் மீளப்பெறப்படும் வரை, பன்னாட்டு மத்தியஸ்த்தத்துடன் முன்னெடுக்கப்படும் எந்தவிதமான அரசியல் செயன்முறைகளும் தொடங்கப்படக்கூடாது. முழுமையான குடிமை வெளி (civic space) மீளவும் ஏற்படுத்தப்படல், சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்படும் தன்மை, அரசியல் கருத்துச் சுதந்திரம் போன்றவை, சுயநிர்ணயத்தைப் பிரயோகிப்பதற்கான குறைந்தபட்ச முன்நிபந்தனையாகும்.

## VII. அரசியல் பொறுப்பும் மீளநிகழாமையும்

1. சட்டபூர்வமற்ற அரசியலமைப்புச் செயன்முறைகளில் கடந்த காலங்களில் பங்குபற்றியமை கூட்டுரிமைகளை வெளிப்படையாகவே பலவீனப்படுத்தியுள்ளன.
2. அவ்வாறான செயற்பாடுகள் மீளவும் நடைபெறக்கூடாது.
3. எந்த அரசியல் செயற்பாட்டாளரும்:
    a. மக்களின் கூட்டு அதிகாரம் இன்றிச் செயற்பட முடியாது
    b. அரசியலமைப்புச் சாசனத்துக்குப் புறம்பான வரைபுகளை நியாயபூர்வமாக்கக்கூடாது.
    c. சுயநிர்ணய உரிமையைப் பலவீனப்படுத்தக்கூடாது.

## VIII. புலம்பதிந்த மக்கள் குழுமத்தினரும் தேசியத் தொடர்ச்சியும்

1. தேசத்தைப் பொறுத்தவரையில், தமது அரசியல் வேணவாவைக் கூட்டாகப் பிரயோகிக்கும் பங்கைத் தொடர்ச்சியாகக்கொண்டுள்ள, நாடுகடந்த மற்றும் கற்பனைக் குழுமம் என்ற வகையில் புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் ஒரு முக்கிய பகுதியாவர்.
2. அடையாளம், நினைவு, நீதிக்கான பரப்புரை, அரசியல் தொடர்ச்சி போன்ற விடயங்களை புலம்பதிந்த மக்கள் தொடர்ச்சியாகப் பேணுகிறார்கள்.

3. மீள்நிர்மாணம், பொறுப்புக்கூறுதல், அமைதி போன்ற விடயங்களுக்கு புலம்பதிந்த மக்கள் குழுமத்தின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

## IX. புதிய சமூக ஒப்பந்தமும் பன்னாட்டு மத்தியஸ்தத்துடன் மேற்கொள்ளப்படும் அரசியலமைப்புக்கு முந்திய உடன்படிக்கையும்

1. வரலாற்று ரீதியாக ஈழத்தமிழ் மக்கள் சந்தித்த விலக்கப்படுதல் (exclusion), உடன்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த தவறியமை, கட்டமைப்பு ரீதியான சமநிலையற்ற தன்மை போன்ற அனுபவங்களின் காரணமாக, வரலாற்று ரீதியாக நீடித்து நிலைக்கக்கூடியதும் சட்டபூர்வமான தீர்வும் ஏற்கனவே இருக்கின்ற அரசியலமைப்பைத் திருத்தும் செயற்பாடுகளின் ஊடாக அடையப்படமுடியாதது என்பதை உறுதிப்படுத்துகிறோம்.
2. ஒரு நீதியான தீர்வுக்கு முற்றிலும் புதிய சமூக ஒப்பந்தம் ஒன்று அவசியமாகும். அரசியலமைப்புக்கு முந்திய ஒப்பந்தம் என நாம் அழைக்கின்ற புதிய சமூக ஒப்பந்தம் பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கம் காணப்பட்டு, உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் அரசியலமைப்பை உருவாக்கும் செயற்பாட்டுக்கு முன்னரும் அதே வேளையில் அந்த செயற்பாட்டுடன் தொடர்பற்ற சுதந்திரமான வகையில் நிறைவு பெறும்.
3. சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கிடையே பேணப்படும் சமத்துவத்தின் அடிப்படையிலேயே அரசியலமைப்புக்கு முந்திய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதுடன், ஈழத்தமிழ் மக்கள் சுயநிர்ணய தகைமையைக் கொண்ட ஒரு தேசிய இனம் என்பது அங்கீகரிக்கப்படுவதுடன், தமது வரலாற்று ரீதியானதும் பாரம்பரிய மானதுமான தாயகத்தின் பிரதேச ஒருமைப்பாடு, தொடர்புபட்ட தரப்பினரிடையே சமத்துவம், பன்னாட்டுக் குற்றங்கள் மீளநிகழாமை போன்றவற்றுக்கான உத்தரவாதங்களுடன் கூடிய பன்னாட்டு மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்கப்படும் ஒரு சர்வசன வாக்கெடுப்பு ஊடாக தமது அரசியல் நிலையைத் தாமே சுதந்திரமாக நிர்ணயிப்பதற்கு தமக்குள்ள பிரிக்கமுடியாத உரிமைக்கு முழுமையான சட்டபூர்வமான வடிவத்தைக் கொடுப்பதற்கு உரித்துடையவர்கள்.
4. பலவந்தப்படுத்துதல், ஒரு சாராரால் தன்னிச்சையாக மேற்கொள்ளப்படும் திருத்தம், நம்பிக்கையின்மையின் நிமித்தம் முன்னைய நிலைக்குத் திரும்புதல் போன்ற விடயங்கள் குறிப்பிட்ட செயற்பாட்டின் பொழுது நிகழாமல் இருப்பதற்கு, பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உத்தரவாதங்களுடன், அரசியலமைப்புக்கு முந்திய இந்த ஒப்பந்தத்தின் பேச்சுவார்த்தையும் நிறைவும் வெளியக மற்றும் பன்னாட்டு மத்தியஸ்தத்தின் கீழ் நடைபெறும்.
5. அரசியலமைப்புக்கு முந்திய ஒப்பந்தம், பின்னர் தொடரப்படவேண்டிய அரசியலமைப்பு வரைபுக்கான மீறமுடியாத வரையறைகளையும், குறைந்தபட்ச உத்தரவாதங்களையும் முன்வைக்கும். உள்நாட்டு அரசியலமைப்பு கோட்பாடு, அரசியலமைப்புக்கு முந்திய இந்த ஒப்பந்தத்தை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது.
6. இவ்வாறான அரசிலமைப்புக்கு முந்திய ஓர் ஒப்பந்தம் இல்லாமல் பன்னாட்டு மத்தியஸ்தத்துடனும் உத்தரவாதங்களுடனும் முன்னெடுக்கப்படும் எந்த அரசியலமைப்பும் அரசியல் ஏற்பாடும் சட்டபூர்வமற்றதாகக் கணிக்கப்படும் என்பதுடன், அவ்வாறான ஏற்பாடுகள் ஈழத்தமிழ் மக்களை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்த மாட்டாது.
7. ஈழத்தமிழ் மக்களின் அங்கீகாரம் பெற்ற தேசிய பிரதிநிதிகளின் பொருள்நிறைந்த பங்களிப்பும் சுதந்திரமாக வெளிப்படுத்தப்படும் சம்மதமும் இன்றி, ஏற்கனவே இருக்கின்ற அரசியலமைப்பின் வரையறைக்குள் முன்னெடுக்கப்படும் எந்தவித அரசியல் யாப்பை உருவாக்கும் செயற்பாடும், வரலாற்று ரீதியாக பின்பற்றப்படும் (தமிழ்

மக்களை) தவிர்த்து விடுதல் (exclusion) என்னும் செயற்பாட்டின் தொடர்ச்சியாகும் என்பதுடன், ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவற்றுக்கு சனநாயக ரீதியாகவும் சட்டரீதியாகவும் எந்தவித நியாயத்தன்மையும் இருக்கப் போவதில்லை.

8. அரசியலமைப்புக்கு முந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதும், அதற்குப் பொருள் கொள்வதும், ஏற்கனவே இந்தப் பிரகடனத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பன்னாட்டு நடுவர்களின் பங்களிப்புடனும் இணக்கத்துக்கான பாதுகாப்புகளையும் கொண்டுள்ளதைப்போல மீற முடியாத வகையில் பன்னாட்டு நடுவர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும்

## X. முடிவான தீர்மானம்

1. கூட்டானதோர் அரசியல் அடையாளத்தாலும், வரலாற்றுத் தொடர்ச்சியாலும், பன்னாட்டு நீதிக்குட்பட்ட இயல்புரிமைகளாலும், ஈழத் தமிழர்கள் தமது இருப்புநிலையைத் தனித்துவமான ஒரு மக்களாகவும் தேசமாகவும்; மீளவும் உறுதி செய்துகொள்கிறார்கள்.

2. பன்னாட்டுச் சட்டத்தில் உறுதிசெய்யப்பட்டுள்ளதும், சட்டவியல் ரீதியாக நிறுவப்பட்டுள்ளதுமான சமூக, அரசியல், பொருண்மிய, பண்பாட்டு மேம்பாடு உள்ளிட்ட தமக்கேயுரித்தான பராதீனஞ்செய்யப்படவியலா சுயநிர்ணய உரிமையைத், தாமே சுயமாகத் தீர்மானித்து முன்னெடுப்பதற்கு உரித்துடையவர்கள் என்று மீளுறுதி பூண்கிறார்கள்.

3. தகவலறிந்த இசைவும் சுதந்திரமான ஒப்புதலும் அற்ற வழிமுறைகளில் தம்மீது திணிக்கப்படுகின்ற, சமநிலையை நிராகரிக்கின்ற, கூட்டு அரசியல் அடையாளத்தை ஒடுக்குகின்ற, எவ்வகையிலும் பராதீனஞ்செய்யவியலாத சுயநிர்ணய உரிமையை அர்த்தமுள்ள வகையில் அனுபவிக்க இடமளியாத, அனைத்து அரசியலமைப்புகளையும் அரசியற் சட்டகங்களையும் ஈழத்தமிழர்கள் நிராகரிக்கிறார்கள்.

4. இற்றை நாள்வரையான உள்ளகரீதியான அரசியலமைப்பு செயல்முறைகள் அனைத்தும் ஈழத்தமிழர்களின் தேசிய இனச்சிக்கலைத் தீர்க்கத் தவறியது மட்டுமல்ல, தொடர்ந்தும் அடிப்படை அரசியல் உடன்பாடின்றிய உள்ளகரீதியான அரசியலமைப்பு ஏற்பாடுகள் சமத்துவமற்ற, புறக்கணிக்கப்பட்ட, நிலையற்ற தன்மையையே வேரூன்றச் செய்துள்ளன என்பதை உறுதிபட எடுத்துரைக்கிறார்கள்.

5. எந்தவொரு நீதியான தீர்வாயினும், அது நியாயமானதாகவும் நிலைத்ததாகவும் அமையப்பெற வேண்டுமாயின், அதற்கேற்ற பன்னாட்டு உத்தரவாதம் அவசியமானது என்றும், பன்னாட்டு மேற்பார்வையோடு அது முன்னெடுக்கப்படவேண்டும் என்றும், அதுமட்டுமின்றி இன அழிப்புக்கான அரச பொறுப்பு உலக நீதிமன்றிலும், அக்குற்றத்துக்கும் இதர பன்னாட்டுக் குற்றங்களுக்குமான தனிநபர்க் குற்றவியற் பொறுப்பு, 2002 ஜூலை முதலாம் நாளுக்கு முந்தைய கால நியாயத்தையும் உள்ளடக்கி விசாரிக்கவல்ல சிறப்புக் குற்றவியற் தீர்ப்பாயம் அல்லது அதற்கு ஒப்பான பன்னாட்டுப் பொறிமுறை ஒன்றூடாக அமையவேண்டும் என்றும் ஈழத்தமிழர்கள் உறுதிபட வலியுறுத்துகின்றனர். மேலும், அத்தகைய சர்வதேச நீதி பிற்போடப்படுவதற்கோ, நீர்த்துப்போகச் செய்யப்படுவதற்கோ, அல்லது அரசியற் தீர்வுக்காகப் பண்டமாற்றுக்கு உள்ளாக்கப்படும் நிலைக்கோ இட்டுச் செல்லப்படாமல்,

அரசியற் தீர்வுக்கும் அப்பாற்பட்ட சுயாதீனமான சர்வதேச நீதிக்கான சட்டரீதியான கடப்பாடாக அமையப்பெறவேண்டும் என்றும் ஈழத்தமிழர்கள் வலியுறுத்துகிறார்கள்.

6. பராதீனஞ்செய்யப்படவியலாத சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதோடு முழுச் சட்ட வலுவோடு அதை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவும், தொடர்புபட்ட தரப்புகளுக்கிடையேயான சமத்துவத்தையும், நீதியையும், பொறுப்புக்கூறலையும், உரிய மக்கள்களின் கூட்டுரிமைகளை நிலைபேறாக்குவதன் ஊடாகவும் மாத்திரமே அமைதியைக் காணமுடியுமே அன்றி, வெறுமனே அரசியலமைப்பு மாற்றத்தின் ஊடாக மாத்திரம் அதைச் சாதிக்க இயலாதென்பதையும் ஈழத்தமிழர்கள் வலியுறுத்துகிறார்கள்.

7. ஆதலால் ஈழத்தமிழர்கள் சுயநிர்ணயத்துக்குரிய மக்களான ஒரு தேசமாகக் கணிக்கப்பட்டு, அவர்கள் தமது பராதீனஞ்செய்யவியலா சுயநிர்ணய உரிமைக்கான முழுமையான சட்ட வலுவோடு தமக்குரிய அரசியல் இருப்புநிலையைப் பன்னாட்டு மத்தியஸ்தத்தோடும் சுதந்திரமான மக்களாட்சி விருப்போடும் தீர்மானித்துக்கொள்ள இடமளிக்கும் அரசியல் அரசியலமைப்புக்கு முற்பட்ட ஒரு புதிய சமூக ஒப்பந்தம் ஒன்றைப் பேச்சுவார்த்தை ஊடாக ஏற்படுத்த இடமளிக்காத எந்தவோர் அரசியல் தீர்வும் பன்னாட்டு ரீதியாக ஏற்புடையதாகக் கணிக்கப்படக்கூடாது என்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

8. ஈழத்தமிழ் மக்களிலிருந்து இணைபிரியாது ஒருங்கிணைந்த ஓர் அங்கமாக அவர்தம் புலம் பெயர்ந்தோர் கருதப்படவேண்டும் என்றும், ஒரேவிதமான தொடர்ச்சிக்குரிய கூட்டு அரசியல் வேணவாவுக்குரியோராகவும், சுயநிர்ணய உரிமைக்குச் சமநிலைத் தன்மையோடு உரித்துடையோராகவும் அவர்கள் கருதப்பட்டு, பன்னாட்டு உத்தரவாதமும் மேற்பார்வையும் கொண்ட கலந்தாய்வுகளிலும் பேச்சுவார்த்தைகளிலும், பன்னாட்டுச் சட்டத்துக்கேற்ற பொதுவாக்கெடுப்பு உள்ளிட்ட விடயங்களிலும் மக்களாட்சித் தரநிலையோடு அவர்கள் பங்கேற்க இடமளிக்கப்படவேண்டும் என்றும் ஈழத்தமிழர்கள் வலியுறுத்துகிறார்கள்.

9. இவ்வாறான பங்கேற்பும் நேர்மையான சுயநிர்ணயச் செயற்பாடும் இடம்பெற ஏதுவாக தாயகத்தில் எழுந்தமானமான கைதுகளுக்கும் தடையுத்தரவுகளுக்கும் கண்காணிப்புகளுக்கும் காரணமாயுள்ளவையும், அமைதியான அரசியல் வெளிப்படுத்தல்களைத் தடுப்பவையுமாயுள்ள சட்ட, நிருவாக ஒழுங்குகள் நீக்கப்படுவது மட்டுமல்ல, அவற்றையொத்த உள்ளடக்கத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும் புதிய மாற்று ஒழுங்குகளும் ஏற்படுத்தப்படாமல், முழுமையான குடிமை வெளியும் அரசியல் வெளியும் முற்கூட்டியே மீட்டமைக்கப்படல் வேண்டும்.

10. ஈழத்தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் அனைவரும், தமது கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, இக் கோட்பாடுகளை கொள்கைரீதியாக நிலைநிறுத்தும் கூட்டுப் பொறுப்புக்குரியோராகவும், மக்களின் விருப்புக்கும் பன்னாட்டுச் சட்டத்துக்கும் ஏற்றவகையில், தலைமைத்துவப் பண்போடு செயற்படுவோராகவும், அரசியலமைப்புக்கு முன்னான உடன்படிக்கை ஒன்று ஏற்படுவதற்குக் எவ்வகையிலேனும் குந்தகம் விளைக்கும் விதமாக முந்திக்கொள்கின்ற, குறைத்துவிடுகின்ற அல்லது முரண்படுகின்ற அரசியலமைப்பு, அரசியல் ஏற்பாடுகள் எவற்றிலும் பங்கேற்காமலும், அவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்காமலும், பன்னாட்டுச் சட்டத்தின் பாற்பட்ட பராதீனஞ்செய்யவியலா சுயநிர்ணய உரிமை சுதந்திரமாக நடைமுறைப்படுத்தப்படுவது உறுதிசெய்யப்படும் வரை தமது செயற்பாட்டை நிலையுயர்த்திப் பேணவேண்டும்.

## XI. அரசியலமைப்புச் சட்ட விளக்கம் மற்றும் மீறாமை

இப்பிரகடனம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157A ஆம் அகவிதியை நேரடியாகவோ மறைமுகமாகவோ மீறும் வகையில் விளக்கப்படவோ பயன்படுத்தப்படவோ கூடாது.

இப்பிரகடனத்தில் இடம்பெறும் வரலாற்று ஆணைகள், 1983க்கு முந்தைய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள், வட்டுக்கோட்டைத் தீர்மானம், அல்லது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் (Interim Self-Governing Authority) முன்மொழிவு குறித்த மேற்கோள்கள் அனைத்தும், அவற்றின் வரலாற்று, சட்ட மற்றும் அரசியல் சூழலுக்குள் மட்டுமே குறிப்பிடப்படுகின்றன.

மேற்கண்ட குறிப்புகள், இலங்கை அரசால் அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் (Ceasefire Agreement) மற்றும் பன்னாட்டு மேற்பார்வையின் கீழ் அமைந்த சமாதானச் செயல்முறை (internationally facilitated peace process) ஆகியவற்றின் கட்டமைப்பிற்குள், மேலும் தேர்தல் செயல்முறைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ஜனநாயக ஆணைகளின் ஒலியில் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இப்பிரகடனம், மனித உரிமைகள், பன்னாட்டு சட்டக் கோட்பாடுகள், பொறுப்புணர்வு மற்றும் சட்டப்பூர்வத் தன்மை ஆகியவற்றின் விளக்கத்தையே குறிக்கிறது; குறிப்பாக, பன்னாட்டு ஆவணங்களிலும் நீதிமன்றத் தீர்ப்புகளிலும் அங்கீகரிக்கப்பட்ட மக்களின் சுயநிர்ணய உரிமையையும் உள்ளடக்கியதாகும்.

இலங்கை உயர் நீதிமன்றத்தின் SC Special Determination No. 03/2014 (4 ஆகஸ்ட் 2017) தீர்ப்பின் அடிப்படையில், அரசியலமைப்பின் 157A ஆம் கட்டுரையின் வரம்பு விளக்கப்பட்டதுடன், சுயநிர்ணய உரிமை மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் குறித்த விவாதம், தனித்து பார்க்கப்படும் போது, தனி நாடு ஒன்றை ஆதரிப்பதாகக் கருதப்படமுடியாது என்பதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.